

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று கழகத் தேர்தல் அறிக்கை, கழக வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முகாம் அலுவலகத்திலிருந்து கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

# மதுரை விமான நிலையம் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை 11ஆம் பக்கத் தொடர்ச்சி

8. ஒசூரில் இருந்து பெங்களூருக்கு மெட்ரோ இரயில் சேவை தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

9.ஒசூர் - தளி சாலையில் இரயில் மேம் பாலம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**தர்மபுரி**

மொரப்பூர் ரயில் நிலையத்தையும் தர்மபுரி ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல ரயில் பாதை அமைக்கப்படும்.

**திருவண்ணாமலை**

1. ஆரணி பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்படும்.

2. ஆரணியில் நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள திண்டிவனம் முதல் ஆரணி வழியிலான நகரி ரயில் பாதைத் திட்டம் விரைந்து முடிக்கப்படும்.

3. நெல், அரிசி வியாபாரிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

4. பத்தாண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள திருவண்ணாமலை - திருக்கோவி லூர் - மாம்பழுப்பட்டு - விழுப்புரம் வழியாகச் சென்னை வரை சென்று கொண்டிருந்த தினசரி ரயில் பொது மக்களின் வசதி கருதி மீண்டும் இயக்கப்படும்.

5. திருவண்ணாமலை நகரம் ஆன்மீகம் மற்றும் விவசாயத்தைச் சார்ந்து அமைந்துள்ளதால் நகர வளர்ச்சிகளுக்குத் தடையாக அமைய விருக்கும் புதிய டோல்கேட் ரத்து செய்யப்படும்.

**விழுப்புரம்**

1. திண்டிவனம் முதல் நகரி வரையான புதிய ரயில் பாதைத் திட்டத்தில் ஆரணி நிலையத்தில் இருந்து ஒண்ணுபுரம் இணைப்புப் பாதையையும் காஞ்சிபுரம் முதல் செய்யாறு இணைப்புப் பாதையையும் சேர்க்க வழிவகை செய்யப்படும்.

2. விழுப்புரத்தில் இருந்து காட்பாடி இடையே இரு வழி ரயில் பாதை அமைக்கப்படும்.

3. உளுந்தூர்பேட்டை - விழுப்புரம் NH45 சாலையிலிருந்து பாதூர் கிராமத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ரயில் சாலையில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

4. உளுந்தூர்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட நகர் பகுதி ரயில் நிலையத்தில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைபடி ஒரு விரைவு ரயிலாவது நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

5. சென்னை - பாண்டிச்சேரி பேசஞ்சர் ரயில் விக்கிரவாண்டி ரயில் நிலையத்தில் நின்று செல்ல வகை செய்யப்படும்.

6.தேஜஸ் விரைவு ரயில் விழுப்புரத்தில் நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

7. வண்டி எண் 22671/22672, வண்டி எண் 56703/56704 விழுப்புரத்தில் இருந்து திருச்சி செல்லும் பாசஞ்சர்ரயில்மறுமார்க்கத்தில்விருதாச்சலம் வரை மட்டுமே இயக்கப்படுகிறது இதனை விழுப்புரம் வரை இயக்கஆவன செய்யப்படும்.

**கள்ளக்குறிச்சி**

திருவெண்ணெய்நல்லூர் ரோடு ஆலங்குப்பம் ரயில்வே சுரங்கப் பாதையில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி நிற்காமல் இருக்க ரயில்வே சுரங்க ப்பாதை, மேம்பாலமாக மாற்றி அமைக்கப்படும்.

**சேலம்**

1. சேலம் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படும். பன்னாட்டு விமான நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படும்.

2. சேலத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய தொழில்பூங்கா அமைக்கப்படும்.

3. சேலம் மாவட்டத்தில் ஜவுளி, ஜவ்வரிசி, நார் கயிறு, கொலுசு, விவசாயம் என பல துறைகளில் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது. எனவே, அங்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்.

**நாமக்கல்**

1. ஈரோடு மாவட்ட பாசூரையும் நாமக்கல் மாவட்ட சோழிராமணியையும் இணைக்க ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

2. நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

**ஈரோடு**

1. ஈரோடு ரயில் நிலையம் முதல் காங்கேயம், தாராபுரம், பழனி ரயில் நிலையம் வரை புதிய அகல ரயில் பாதைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

2. ஈரோடு நாடாளுமன்றத் தொகுதியில் ஒன்றிய அரசின் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**திருப்பூர்**

மக்காச்சோளம், சோயா போன்ற ஏராளமான விவசாயப் பொருள்கள் இந்திய இரயில்வே - சரக்கு வண்டிகள் மூலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து நமது தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த முக்கிய இடுபொருள் தானியங்களின் விலையைக் குறைக்க கட்டணச் சலுகைகளை வழங்கிடப் பரிந்துரைக்கப்படும்.

**நீலகிரி**

1. நீலகிரி மாவட்டத்தில் முக்கியப் பொருளாதாரமான சிறு தேயிலை விவசாயிகளின் பச்சைத் தேயிலைக்குக் குறைந்தபட்ச விலையாக கிலோ ரூபாய் 35 ஆக நிர்ணயிக்கப்படும்.

2. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத்தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் வழித்தடங்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேம்படுத்தப்படும்.

**கோவை**

1. தமிழ்நாடு வியாபாரிகளுக்காக இரவு நேரங்களில் கோவையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

2. பொள்ளாச்சி இளநீர் மற்றும் தேங்காய்க்கு GI Tag கொண்டுவரப்படும். பொள்ளாச்சியில் COLD STORAGE மையம் அமைக்கப்படும்.

3. பொள்ளாச்சி ரயில் நிலையம் புனரமைக்கப்படும்.

4. சேரன் விரைவு ரயில் சேவை பொள்ளாச்சி வரை நீட்டிக்கப்படும்.

5. கோவை மெட்ரோ ரயில் திட்ட சேவையைத் திருப்பூர் வரை நீட்டிக்க வழிவகை செய்யப்படும்.

6. மேட்டுப்பாளையம்- சத்தியமங்கலம்- கோபிசெட்டிபாளையம் - ஈரோடு அகல ரயில்பாதைத் திட்டம் நிறை வேற்றப்படும்.

**பெரம்பலூர்**

ஆத்தூர் ரயில் நிலையம் முதல் பெரம்பலூர், அரியலூர் ரயில் நிலையம் வரை புதிய அகல ரயில் பாதை அமைக்க ஆவன செய்யப்படும்.

**அரியலூர்**

1. அரியலூர் முதல் சிதம்பரம் வரை ஜெயங்கொண்டம், காட்டுமன்னார்குடி வழியாகப் புதிதாக இரயில் பாதை அமைத்து இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

2. அரியலூர் நகராட்சியில் அமைந்துள்ள இரயில் நிலையத்தில் விரைவு மற்றும் சிறப்பு இரயில்கள் நின்று செல்ல வழிவகை செய்யப்படும்.

**திருச்சி**

1. திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையை ரயில் பெட்டித் தொழிற்சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த பணியில் திருச்சி பி.எச்.இ.எல் நிறுவனமும் இணைந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தேசிய நெடுஞ்சாலையில் பால் பண்ணை முதல் துவாக்குடி வரை உயர்மட்டச் சாலை மற்றும் அணுகு சாலை அமைக்கப்படும்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## கழகத் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்!

**தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:**

- இந்திய அரசியல் சாசன முகப்பு
- திராவிட மாடல் அரசின் வெற்றி முத்திரைகள்
- மாநில சுயாட்சி
- ஆளுநர் நியமனம்
- அரசியல் சட்டப் பிரிவு 356 அகற்றப்பட வேண்டும்
- சென்னையில் உச்சநீதிமன்றத்தின் கிளை:
- புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து
- மொழிக் கொள்கை (Language Policy)
- தாயகம் திரும்பிய தமிழர் குடியுரிமை:
- சேதுசமுத்திரத் திட்டம்
- ஒன்றிய அரசின் முகமைகள்
- பா.ஜ.க. அரசின் வாய் ஜாலங்கள்
- பா.ஜ.க அரசின் ஊழல்கள் சில
- ஜம்மு காஷ்மீர் மாநில அந்தஸ்து ரத்து
- புதிய கல்விக் கொள்கை
- இடஒதுக்கீடு
- ஒன்றிய அரசில் பங்கேற்று தமிழ்நாட்டின் வளம்பெருக்கிய தி.மு.கழகம்
- இந்தியா கூட்டணி அரசு நிறைவேற்ற உள்ள திட்டங்கள்
- இளைஞர் நலன்
- மகளிர் நலன்
- புலம்பெயர்வோர் நலன்
- மீனவர் நலன்
- குழந்தைகள் நலன்
- தொழிலாளர் நலன்
- பேரிடர் மேலாண்மை
- சிறுபான்மையினர் நலன்
- நீதித்துறை
- விளையாட்டு
- சமூக நீதி
- சாதிவாரிக் கணக்கெடுப்பு:
- சமூக நல்லிணக்கம்
- பொருளாதாரம்
- வணிகர் நலம்
- சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) சீர்திருத்தம்
- நெசவாளர் நலன்
- மருத்துவம் மற்றும் குடும்ப நலன்
- விவசாயம்
- ராணுவ வீரர் நலன்
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கான திட்டங்கள்